**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 155** **நாள்: 18.05.2026**

**பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் பிறக்கும் குழந்தைகளின் பிறப்புச் சான்றிதழ் பெற்றோரின் வாட்ஸ் ஆப் எண்ணிற்கு நேரடியாக அனுப்பப்படும்.**

**மாநகராட்சி ஆணையாளர் திரு.ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

பெருநகர சென்னை மாநகராட்சியின் சேவைகள் மக்களுக்கு எளிதில் சென்றடையும் வகையில் டிஜிட்டல் வழியான பல்வேறு சேவைகள் வழங்கப்பட்டு வருகிறது.

இதன் ஒரு பகுதியாக, பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் பிறக்கும் குழந்தைகளுக்கான பிறப்புச் சான்றிதழ்கள் சென்னை மாநகராட்சியின் இணையதளம் வாயிலாக வழங்கப்பட்டு வந்த நிலையில், தமிழ்நாட்டில் முதல்முறையாக தற்போது மக்களுக்கு இந்த சேவையினை எளிதில் வழங்கும் வகையில், பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள மருத்துவமனைகளில் குழந்தைகள் பிறப்பின் போது பதிவு செய்யப்படும் பெற்றோர்களது கைபேசி எண்ணின் வாட்ஸ் ஆப்பிற்கு குழந்தையின் பிறப்புச் சான்றிதழ் PDF வடிவில் அனுப்பி வைக்கப்படும். மேலும், பெருநகர சென்னை மாநகராட்சியின் வாட்ஸ் ஆப் சாட்பாட் எண் 94450 61913 என்ற எண்ணிலும் பெற்றோர் தங்களது குழந்தை பிறப்பின்போது பதிவு செய்யப்பட்ட கைபேசி எண் மூலம் குழந்தையின் தகவல்களை பதிவு செய்து குழந்தையின் பிறப்புச் சான்றிதழினை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

மேற்கண்ட தகவலை மாநகராட்சி ஆணையாளர் திரு.ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**